கவனத்திலே இருத்தி ஆவன செய்யவேண்டியது அவசியம்தான். இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொல்லுகிற நேரத்திலே அதையெல்லாம் நிச்சயம் கவனிக்கும். ஏனென்றால், ஏழை எளியவர்கள், தொழிலாளர்கள், பலவிலமானவர்கள், இவர்கள் முன்னேற வேண்டும், அவர்கள் பொருளாதார அபிவிருத்தி அடையவேண்டுமென்பதிலே மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது இந்த அரசு. வரியும் கொடுக்கவேண்டும், ஆனால் அவர்களும் பிழைக்கவேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையே தவிர, ஏழை எளியவர்கள் கழுத்தைத் திருகி வரி வாங்கவேண்டுமென்ற கொள்கை உடையதல்ல என்று கூறிக்கொண்டு அவர்கள் கூறிய அந்த ஆலோசனையை சாத்தியமான முறையிலே, விதிவிலக்குகளைச் செய்வதற்கு எந்த எந்த இடங்களிலே சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று ஆராயும். விதிவிலக்கை ஏற்கனவே அளித்து வருகிறோம். இந்த முறையிலே மேலும் விதி விலக்கு அளிப்பதற்கு அரசு முன் வரும் என்று சொல்லிக்கொண்டு இந்த மாமன்றம் இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கோரி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி "தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/69) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/69) நிறைவேற்றப்பட வேண்டும்' என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா சட்டமாக ஆக்கப்பட்டது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) 1969-ம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) மசோதா (ச. மசோதா எண் 4/69)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1969-ம் ஆண்டு, கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 4/69)-வை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.